செ.வெ.எண் :- 188 நாள் :- 07-03-2012

**சிவகாசி அருகே சித்துராஜபுரம் கிராமத்தில் பட்டாசு ஆலையில் ஏற்பட்ட தீ விபத்தில் ஒருவர் பலி, ஒருவர் படுகாயம்**
**மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்க துறை அமைச்சர் திரு.கே.டி.இராஜேந்திரபாலாஜி அவர்கள் நேரில் ஆறுதல்**

சிவகாசி வட்டம் சித்துராஜபுரம் அருகே இன்று (07.03.2012) நேஷனல் பேப்பர் கேப்ஸ் பேக்டரியில் ஏற்பட்ட திடீர் வெடிவிபத்தில் சிவகாசி அய்யனார் காலனியைச் சோந்த கணபதி ஆசாரி, வயது 68, த/பெ.பெரியநாயகம் என்பவர் தொழிற்சாலையில் சுவர் இடிந்து விழுந்ததில் இடிபாடுகளில் சிக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். சிவகாசி சரஸ்வதிபாளையத்தைச் சேர்ந்த நடராஜன், வயது 51, த/பெ.முத்தையா, என்பவர் தீக்காயம் அடைந்து சிவகாசி அரசு பொது மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தைக் கேள்விப்பட்ட மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை அமைச்சர் திரு.கே.டி.இராஜேந்திரபாலாஜி அவர்கள் சிவகாசி அரசு மருத்துவமனைக்கு உடனடியாக விரைந்து வந்து தீக்காயமடைந்த நடராஜனை நேரில் பார்வையிட்டு குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறினார். மேலும் உடனடியாக அவருக்கு உயர் சிகிச்சை அளிக்க மதுரை மருத்துவமனைக்கு கொண்டு செல்ல வேண்டி, அதற்குரிய ஏற்பாடுகளை விரைவாக செய்து மதுரைக்கு ஆம்புலன்சில் அனுப்பி வைத்தார். அதுசமயம் நடராஜன் அவர்களின் மனைவி மற்றும் உறவினர்களை அழைத்து இதர செலவுகளுக்கு தனது சொந்த பணத்தில் இருந்து நிதியுதவி வழங்கினார்.

விபத்தில் மரணமடைந்த கணபதி ஆசாரியின் மனைவி காளியம்மாள், மகன்கள் மாரியப்பன், இராமச்சந்திரன், இராஜா ஆகியோரை நேரில் சந்தித்து ஆறுதல் கூறி அவரின் ஈமக்கிரியை செலவிற்காக தனது சொந்த பணத்தில் இருந்து நிதியுதவி வழங்கினார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பொதுநிவாரணநிதியில் இருந்து ரூ.100000/- (ரூபாய் ஒரு இலட்சம்) உதவித்தொகை பெற்றுத்தர வேண்டிய ஏற்பாடுகளை செய்ய சம்பந்தப்பட்ட அலுவலர்களைக் கேட்டுக் கொண்டார். மேலும் பிரேதப்பரிசோதனையை உடனடியாக முடித்து உரியவர்களிடம் உடலை ஒப்படைக்க அரசு மருத்துவமனை மருத்துவர்களை கேட்டுக் கொண்டார்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9